யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.
# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 09
## First Term Examination – 2020 – Grade 09

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் | 61 | T | I, II | இரண்டு மணித்தியாலம் Two Hours |
| சுட்டெண் Index No | | | | புவியியல் |

பகுதி - I

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. ஆசியாவுடன் புவியியல் அடிப்படையில் தொடர்புபட்டுள்ள கண்டம் எது?
   1)ஆபிக்கா 2)ஐரோப்பா 3)வடஅமெரிக்கா 4)தென்அமெரிக்கா

2. பின்வருவனவற்றுள் ஆசியாக்கண்டத்திற்கு உரித்தான தீவு அல்லாதது?
   1)யப்பான்தீவு 2)இந்தோனேசியா 3)பிலிப்பைன்ஸ் 4)மடகஸ்கார்

3. ஆசியாக்கண்டத்தின் பரப்பளவு யாது?
   1)44.6மில்லியன் 2)44.6பில்லியன் 3)44.4மில்லியன் 4)44.4பில்லியன்

4. கடல்மட்டத்தினை விட மிகத்தாழ்வாக அமைந்துள்ள கடல் எது?
   1)ஏரல்கடல் 2)கஸ்பியன்கடல் 3)சாக்கடல் 4)செங்கடல்

5. உலகில் அதிக சனத்தொகை உள்ள நாடு எது?
   1)இந்தியா 2)யப்பான் 3)சீனா 4)பாகிஸ்தான்

6. ஆசியாவில் அமைந்துள்ள சுதந்திர நாடுகள்?
   1)52 2)51 3)54 4)87

7. இமயமலைத்தொடரில் அமைந்துள்ள தவளகிரி மலைச்சிகரத்தின் உயரம் யாது?
   1)8167m 2)8156 m 3)8126 m 4)7817 m

8. உலகின் முகடு என அழைக்கப்படும் மேட்டு நிலம் எது?
   1)தக்கணமேட்டுநிலம் 2)திபெத்மேட்டுநிலம்
   3)பமீர்மேட்டுநிலம் 4)ஈரான் மேட்டுநிலம்

9. பின்வருவனவற்றுள் ஆட்டிக்சமுத்திரத்தில் சங்கமிக்கும் நதி அல்லாதது?
   1)யாங்சி 2)ஓப் 3)யென்சி 4)லீனா

10. உலகின் மிக ஆழமான நன்னீர் ஏரி எது?
    1)பொல்காஸ்ஏரி 2)பைக்கால்ஏரி
    3)அயர்ஏரி 4)தித்திக்காஏரி



kalvi.lk

- **ஆண்டு முழுவதும் மிக உயர்வான வெப்பநிலை நிலவும்.**
- **சராசரி வெப்பநிலை $18^{0}$c விட அதிகம்.**
- **வெப்பமான கால நிலையை காணக்கூடியதாக உள்ளது.**

11. மேற்குறிப்பிட்ட பண்புகளைக்கொண்ட காலநிலை வலயம் எது?
   1)கடுங்குளிர்வலயம் 2)இடைவெப்பவலயம்
   3)அயனவலயம் 4)இளஞ்சூடான காலநிலை

12. ஆசியாவில் அதிக வெப்பநிலை நிலவும் "ஜகோபாபாத்" நகரம் அமைந்துள்ள நாடு எது?
   1)இந்தியா 2)பங்களாதேஷ் 3)பாகிஸ்தான் 4)சீனா

13. இடைவெப்ப இலையுதிர் காடுகளில் உள்ள விசேட தாவர வகைகளின் தொகுதி?
   1)மகோகனி ,மூங்கில்,கருங்காலி,ரோஸ்வூட்
   2)மல்பெரி,செஸ்னட்,யுகெலிப்டஸ்,டக்லஸ்பர்
   3)பைன்,ஸ்புருஸ்,லாச்,ஒக்
   4)ஏபோனி,சந்தனம்,பைன்,ஏகேஷியா

14. ஈராக்கின் ஊடாக பாய்கின்ற யூப்ரடிஸ்,தைகிறிஸ் ஆகிய இரு நதிகளுக்கிடையில் வளர்ச்சியடைந்த நாகரிகம் எது?
   1)குவாங்கோநாகரிகம் 2)சிந்துவெளிநாகரிகம்
   3)மொசபத்தேமியநாகரிகம் 4)மொஹஞ்சதாரோநாகரிகம்

15. யப்பானில் அதிக சனத்தொகை செறிவு கொண்ட நகரம் எது?
   1)யொக்ககாமா 2)கோபே 3)டோக்கியோ 4)பிஜீங்

16. பாகிஸ்தானின் மொத்த ஊழியர்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களின் வீதம் யாது?
   1)25.9% 2)43% 3)25% 4)27.5 %

17.உலகில் மூன்றாவது பாரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடு எது?
   1)பாகிஸ்தான் 2)டுபாய் 3)யப்பான் 4)இலங்கை

18. டுபாய் நாட்டினுடைய பொருளாதாரத்தின் அடிப்படையாக அமைவது?
   1)கைத்தொழில் உற்பத்தி 2)விவசாய உற்பத்தி
   3)சுற்றுலா கைத்தொழில் 4)கனியநெய் உற்பத்தி

19. உலகில் அணுமின் சக்தியை அதிகளவில் பயன்படுத்துகின்ற ஆசிய நாடு?
   1)அமெரிக்கா 2)ஆர்ஜென்ரீனா 3)பிறேசில் 4)யப்பான்

20. ஐக்கிய அரபு எமிரேட் கூட்டமைப்பிலுள்ள சிறிய இராச்சியமான டுபாயின் பரப்பளவு யாது?
   1)3755Km$^2$ 2)3500 Km$^2$ 3)3885 Km$^2$ 4)3680 Km$^2$

(20×2=40புள்ளிகள்)




kalvi.lk

## பகுதி - II

- **முதலாம் வினா உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

1) முதலாம் வினாவிற்கு பின்வரும் ஆசியப்படத்தினை அடிப்படையாகக்கொண்டு விடையளிக்குக.




தரப்பட்ட ஆசியப்படத்தில் பின்வரும் அம்சங்களை குறிக்து நிற்கும் இலக்கத்தை தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக?

| | | |
|---|---|---|
| I. | கஸ்பியன்கடல் | (……) |
| II. | டோக்கியோ | (……) |
| III. | ஆட்டிக்சமுத்திரம் | (……) |
| IV. | பாங்கொக் | (……) |
| V. | பாரசீக வளைகுடா | (……) |
| VI. | சுமாத்திரா | (……) |
| VII. | பைக்கால் | (……) |
| VIII. | யூரல்மலை | (……) |
| IX. | ஒக்கொட்ஸ்கடல் | (……) |
| X. | அராபியமேட்டுநிலம் | (……) |
| XI. | யாங்ஸிக்சியாங் | (……) |
| XII. | சைபீரியச்சமவெளி | (……) |

(12×1=12புள்ளிகள்)

2)

i. ஆசியாவை ஐரோப்பாவிலிருந்தும் ஆபிரிக்காவிலிருந்தும் வேறுபடுத்தும் எல்லையாக அமையும் கடல்கள் நான்கு தருக? (2புள்ளி)

ii. ஆசியாவின் பிரதான எல்லைகளைத் தருக? (4புள்ளி)

iii. ஆசியப் பிரதேசத்தின் பௌதிகம் சார்ந்த சிறப்பம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக? (6புள்ளி)




kalvi.lk

3)

i. (அ) உலகின் அதி உயர்ந்த மலைச்சிகரம் எது?
(ஆ) உலகிலேயே அதிகமான மழைவீழ்ச்சியை பெறும் இடம் எது? (2புள்ளி)

ii. சமயங்களின் பிறப்பிடமாக விளங்கும் ஆசியாவில் உருவான சமயங்கள் நான்கு தருக? (4புள்ளி)

iii. (அ) ஆசியாக்கண்டத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய மலைத்தொடர்கள் மூன்றினதும், சமவெளிகள் மூன்றினதும் பெயர்களைக் குறிப்பிடுக? (3புள்ளி)
(ஆ) பாகிஸ்தானின் இரு விவசாயப் பருவங்களிலும் உற்பத்தி செய்யப்படும் பயிர் வகைகளை அட்டவணைப்படுத்துக? (3புள்ளி)

4)

i. காலநிலை என்றால் என்ன? (2புள்ளி)

ii. (அ) ஆசியாவின் மிக குறைந்த வெப்பநிலை நிலவும் சிறிய நகரம் எது?
(ஆ) அயன மழைக்காட்டிலுள்ள பாலூட்டி விலங்குகள் நான்கு தருக? (4புள்ளி)

iii. ஆசியாக்கண்டத்தில் காணக்கூடிய பிரதான காலநிலைகள் ஒவ்வொன்றிலுமுள்ள உப காலநிலை வகைகளை அட்டவணைப்படுத்துக? (6புள்ளி)

5)

i. ஆசிய வலயத்தில் வாழும் மனித இனங்கள் இரண்டினைத் தருக? (2புள்ளி)

ii. சனத்தொகையின் சமனற்ற பரம்பல் மீது செல்வாக்குச்செலுத்தும் பௌதீகக்காரணிகள் நான்கு தருக? (4புள்ளி)

iii. (அ) ஆசியாவில் சனத்தொகை குறைந்த பகுதிகள் நான்கு தருக? (2புள்ளி)
(ஆ) ஆசியாவில் சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றிற்கு உதாரணங்கள் தருக? (4புள்ளி)

6)

i. பாகிஸ்தானின் விவசாயப்பருவங்கள் இரண்டும் எவை? (2புள்ளி)

ii. பாகிஸ்தானின் பிரதான விவசாய உற்பத்திகள் நான்கினைக் குறிப்பிடுக? (4புள்ளி)

iii. (அ) யப்பானின் பிரதான மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனங்கள் நான்கினைக் குறிப்பிடுக? (2புள்ளி)
(ஆ) மோட்டார் வாகன உற்பத்தி தவிர்ந்த யப்பானின் உற்பத்திக் கைத்தொழில்கள் நான்கு தருக? (4புள்ளி)

7)

i. ஆசியாவின் பிரதான விவசாய நாடாக பாகிஸ்தான் முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (2புள்ளி)

ii. யப்பானில் மரபணு தொழில் நுட்பமுறை பயன்படுத்தப்பட்ட துறைகள் நான்கு தருக? (4புள்ளி)

iii. (அ) யப்பானில் கணினி உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் நான்கு தருக? (2புள்ளி)
(ஆ) சேலை மையமாக விளங்கும் டுபாயின் சேலைக்கைத்தொழில்கள் நான்கினைக் குறிப்பிடுக? (4புள்ளி)



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP

075 287 1457